# வெட்டவெளி



ப்ரக்ஞன்

# வெட்டவெளி

ஆக்கம்

ப்ரக்ருன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | வெட்டவெளி |
| **தெளிவுரை** | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2021 |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **பக்கங்கள்** | : | 20 |
| **விலை** | : | அக விழிப்பு |

# வெட்டவெளி

பிரபஞ்சம் என்பது வெட்டவெளியாகிய அறிவு **'ஒளியிலிருந்து ஐந்து பூதங்களாக விரிந்துக் கொண்டிருக்கும்'** ஒரு இயக்கம். அதாவது, ஒளியிலிருந்து விரிந்த அல்லது விரிந்து கொண்டிருக்கும் ஒன்றிற்கே **'பிரபஞ்சம்'** என்று பெயர்.

பிரபஞ்சம் எனும் சொல் சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் **'நன்கு விரிந்தது'** என்பதே நன்கு விரிந்த அல்லது விரிந்து கொண்டிருக்கும் அண்டவெளியைக் குறிக்கும் சொல்லே பிரபஞ்சம் தமிழில் **பேரண்டம்** எனச் சொல்லலாம்.

பிரபஞ்சத்தை ஒருபோதும் இந்த ஊனக்கண்களால் முழுமையாகப் பார்த்துவிட முடியாது. அறிவியல் ஆய்வுகள் கூட அனுமானத்தினால் மட்டுமே அதனை வரையறுத்துக் கூறுகிறது.

ஆக, பிரபஞ்சத்தின் வடிவம் இப்படித்தான் இருக்கும் என்பதைக் கூற முடிந்த முடிவாக, விஞ்ஞானத்தினால் உறுதி செய்ய முடியாது. காரணம், அது விநாடிக்கு, விநாடி விரிந்துக் கொண்டேஇருக்கின்றது.

அத்தகைய இந்த பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகவும், அடிப்படையாகவும் இருப்பது "**வெளி**" ஆகும்.

இங்கு '**வெளி**' என்று கூறுவதை பஞ்ச பூதங்களிலுள்ள '**ஆகாயம்**' என்பதாகத் தவறாகப் புரிந்துக்கொள்ளக் கூடாது.

இதனை "**வெட்டவெளி**" எனத் தமிழ் சித்தர்கள் கூறுகின்றனர்.

இதுவே, "**இருப்பு**", "**இறைவன்**", "**மெய்ப்பொருள்**", "**ஆதிமூலம்**" எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது.

இந்த வெட்டவெளியிலிருந்து வெளிப்பட்டதே இந்த பேரண்டங்கள், அண்டங்கள், விண்மீன் குடும்பங்கள், சூரியக் குடும்பம், பூமி, உயிரினங்கள், மனிதன் என எல்லாமே.

வெட்டவெளியில் இருந்து '**பிரபஞ்சம்**' தோன்றியதை பெருவெடிப்புக் கொள்கையின் மூலமாக அறிவியலாரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

ஆனால் பெருவெடிப்புக்கு சில வினாடிகள் முன்பு, என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை? அறிவியல் இன்றும் ஆய்வாக மட்டுமே வைத்திருக்கின்றது.

மெய்ஞானமோ முடிந்த முடிவை '**சித்தாந்தம்**' ஆக்கி இருக்கின்றது.

பேரண்டத் தோற்றத்தை எளிமையான வழியில் புரிந்து கொள்ளப்பார்க்கலாம்.

எவ்வித அசைவும் இல்லாதிருக்கும் வெட்டவெளியில், திடீரென ஒரு அசைவு நிகழ்கிறது.

அந்த அசைவு ஏற்படுவதற்கு, எந்த இயக்கம் காரணமாக இருந்ததோ, அந்த இயக்கமே இந்த பேரண்டம் முதற்கொண்டு, அனைத்தும் இயங்குவதற்கு அடிப்படையாக இருக்கின்றது.

வெட்டவெளியின் ஒரு புள்ளியில் நிகழும் அண்டப் பெருக்கம் அதன் அழுத்தம் காரணமாக வெளிப்பட்டு, அவ்யக்த நிலையில் ஒடுங்கியிருந்த தூய அறிவு மனமாகப் பிரகாசித்து, இந்த பிரபஞ்சமாக விரிந்தது.

இதனைத்தான் அறிவியல் பெருவெடிப்பு உண்டாகி, அந்த வெடிப்பின் அசைவால், மொத்த அண்டங்கள் விரிகின்றன என்று கூறுகின்றது.

இதை அறிவியலுக்கு அப்பாற்பட்டு, ஆன்மவியல் பாடங்கள் மூலம் சற்று தெளிவாக விளங்கிக் கொள்ள முயற்சிக்கலாம்.

அதாவது, வெட்டவெளி, பேரண்டம் போன்றவற்றை **சிவம், சக்தி** எனும் குறியீடுகளைக் கொண்டு அறியலாம்.

'**சிவம்**' என்பது வெட்டவெளியைக் குறிப்பது. '**சவம்**' என்றால் உயிரற்றது என நாமறிவோம்.

அப்படியானால் சிவம்?

ஆம், அது உயிருள்ளது.

சவத்தை இன்னும் நுட்பமாக சிந்தித்தால் உயிரற்றதோடு அசைவற்றது எனத் தெரிந்து கொள்ளலாம். சிவத்தை நுட்பமாக சிந்தித்தால் இயக்கமற்று, ஆனால் உயிருள்ளதாகக் காட்சியளிக்கும்.

அதாவது, இயக்கமில்லாமல் உயிரோடு இருக்கும் வெட்ட வெளியே '**சிவம்**' எனப்படுகின்றது.

திடீரென வெட்டவெளியில் நிகழும் அழுத்தமே வெடிப்பு அல்லது விரிவாகிறது என்று ஏற்கனவே பார்த்தோம்.

அந்நிலையில் அசைவற்ற '**சிவம்**' அசைகின்ற '**சக்தி**' இயக்கமாக மாறுகிறது. உயிருள்ள, இயக்கமற்ற, வெட்ட வெளியான '**சிவம்**' இயக்கத்திற்கு வரும் போது, அதனை '**சக்தி**' என அழைக்கப்படுகின்றது.

இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டுமானால், உயிருள்ள, இயக்கமற்ற, வெட்டவெளியைச் '**சிவம்**' என்றும், உயிருள்ள, இயக்கங்கள் நிகழும், வெளியை '**சிவசக்தி**' என்றும் கொள்ளலாம்.

'**சிவசக்தி**' என்பது, அசையாத சிவத்தையும், அந்த சிவத்திடமிருந்து வெளிப்பட்ட, அசையும் சக்தியையும் ஒன்றாக இணைத்து '**அர்த்தநாரீஸ்வரன்**' என்ற ஒரு கடவுளை உருவகப்படுத்தி நம்முடைய சனாதன தர்மத்தின் வழியில் வந்த சமயம் வழிபடுகின்றது.

வெட்டவெளியின் ஒரு சிறுபுள்ளியில் திடீரென நிகழும், இந்த அசைவால் உண்டாகும் சத்தமும் (நாதம் – ஓசை), வெளிச்சமும் (விந்து – ரூபம்) பேரண்டத்திற்கான தோற்றப் புள்ளிகள்.

அதாவது, ஒரு பேரணுவில், நடந்த வெடிப்பில், பல்வேறு அணுக்களாக இந்த பேரண்டம் வெளிப்பட்டது என்று அறிவியல் கூறும் ஆய்வின்படி, அந்த வெடிப்பில் (அசைவில்) முதலில் '**ஒலி**' தோன்றி, அதன்பிறகே '**ஒளி**' தோன்றியதை அறியலாம்.

'**நாதம்**', '**விந்து**' என இரண்டு சொற்களை நமது இந்து சமயத்தில் தோற்றக் குறியீடுகளாகக் குறிப்பிடுவர்.

'**நாதம்**' என்பது "**ஒலி**".

'**விந்து**' என்பது "**ஒளி**".

"**நாத விந்து கலாதி நமோநம**" எனும் அருணகிரிநாதரின் '**திருப்புகழ்**' ஒரு சான்று.

'**நாதம் (ஒலி)**' முதலிலும், '**விந்து (ஒளி**') பிற்பாடும் என்பதாகவே அப்பாடலும் கூறுகின்றது.

நம்முடைய மக்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள் அவ்வொலியை '**ஓம்**' என்றும், '**ஆமென்**', '**ஆமீன்**', என்றும் கூறுகின்றார்கள்.

சைவ சமயத்தில் இறைவனை '**நாதன்**' என்றே குறிப்பிடுகிறார்கள்.

'**சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி, சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி**' என்றும், '**நாதன் நாமம் நமச்சிவாயவே**' எனக்கூறுவதையும் இங்கு நினைவில் கொள்ளவும்.

ஆக பிரபஞ்சத்தோற்றத்திற்கு அடிப்படையான நாதத்திற்கு (ஒலிக்கு) மூலமான பொருளைச் சுட்டும் குறியீடு **நாதன்.**

அடுத்து, வெளிச்சத்தை '**சோதி**' எனக் குறிக்கலாம்.

இங்கு இன்னும் ஒன்றைத் தெளிவு படுத்துவது மிகவும் அவசியமாக இருக்கின்றது.

'**வெளிச்சம்**' என்பது வேறு, "**ஒளி**" என்பது வேறு. அதுப்போன்றே, "**பேரொளி**" என்பது வேறு, "**சுயம்சோதி**" என்பது வேறு.

முதலில் வெட்டவெளி மட்டுமே இருந்தது. அந்த வெட்டவெளியில் இருந்து வெளிப்பட்ட ஆற்றலின் (சக்தியின்) அசைவில் உண்டான அந்த பெரு வெடிப்பின் போது, எழுந்த ஓசையை '**ஓம்**' என்றும், அதன்பிறகு வெளிப்பட்ட வெளிச்சத்தை '**சோதி**' என்றும் அறியலாம்.

அடுத்து, வெட்டவெளிக்குள் நிகழ்ந்த பெருவெடிப்பின் இயக்கத்தின் துவக்கத்தில் வெளிப்பட்ட (சப்தத்தை) '**ஓம்**' என்ற '**ஒலி**' யைச் சுட்டி நிற்பவர் '**விநாயகர்**' ஆவார்.

அவருக்கு வடிவைக்கப்பட்ட வடிவமும் '**ஓம்**' என்ற அக்ஷரம் போன்றே காணப்படும். விநாயகரின் திருவுருவை வலது காது முதல் தொடங்கி தலையை சுற்றி வளைத்து இடது காது வரை கொண்டு வந்து தொங்கும் தும்பிக்கை வரை கொண்டு வந்து சுழித்தால் '**ஓம்**' என்ற **பிரணவ வடிவம்** புலப்படும்.

அதனால் அவர் **நாத முதல்வர்** எனப்படுகின்றார். மேலும்,

அடுத்து, ஒலியைத் தொடர்ந்து உதிக்கும், ஒளியைச் சுட்டி நிற்பவர் '**முருகன்**' ஆவார். முருகனின் பிறப்பும் சிவனின் நெற்றிக் கண்களில் இருந்து வந்த ஒளியின் மூலமாகவே நிகழ்ந்தது என புராணக் கதைகளில் படித்திருக்கின்றோம்.

ஆகவே, வெட்டவெளியில் இருந்து வெளிப்பட்ட '**ஒலி**' – யை '**விநாயகர்**' எனவும், '**ஒளி**' – யை '**முருகன்**' எனவும் கொண்டு சைவ சமயம் வழிபடுகின்றது.

*"ஆதிநடு அந்தம் கடந்த நித்தியானந்தப் போதமாய் பந்தம் தண்ந்த பரஞ்சுடராய்"* எனும் குமரகுருபரரின் கந்தர்கலி வெண்பா வரிகளைக் கவனியுங்கள்.

*"சோதிப்பிழம்பதோர் மேனியாக"* எனும் கந்தபுராண வரியையும் நினைவு கூர்வோம்.

*"ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகனுருவங் கண்டு"* என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

'**சிவசக்தி**' என்பது, இந்த ஒட்டு மொத்த பிரபஞ்சத்தையும் இயக்கிக் கொண்டிருக்கின்ற இயக்க ஆற்றலை சிவன், சக்தி எனவும், அந்த சிவசக்தியிலிருந்து வெளிப்பட '**ஒலி**', '**ஒளி**' ஆற்றல்களை அவர்களின் இரண்டு புதல்வர்களான '**விநாயகர்**', '**முருகன்**' எனவும், அறியாமையில் உள்ள பாமர மக்களுக்காக சைவ சமயம் வடிவமைத்துக் கொடுத்தது.

நாம் நம் அறியாமையினால், அவ்வாறு வடிவத்தில் கொண்டுவரப்பட்ட உருவங்களை மட்டுமே பிடித்துக்கொண்டு, அந்த உருவங்களுக்கு பின்னால் ஒளிந்துக் கொண்டிருக்கின்ற உண்மையான தாத்பர்யத்தை அறியாமல் இருக்கின்றோம்.

உண்மையான '**இருப்பு**' (சத்) எது? என்பதை அறிய மறுக்கின்றோம்.

இந்த "**சத்**" எனும் '**இருப்பு**' என்பது, வழிபடுகின்ற கற்சிலைகளில் மட்டும் இல்லை. படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருள்களிலும், உயிர்களிலும் உள்ளேயும், வெளியேயும் இருக்கின்றது.

அதை, அதே இருப்பாகிய சத் தன்னிடமுள்ள அறிவாகிய சித் என்பதின் வாயிலாக, அறிய மேற்கொண்ட அருமையான திருவிளையாடல்கள் மூலம், அனைத்தும் படைக்கப்பட்டு, ஜடப்பொருட்களில் தொடங்கி, உயிர்பொருட்களில் ஒரு அறிவு தாவங்கள் என ஆரம்பித்து, அதன் அறிவுப் பரிமாணங்கள் படிப்படியாக முன்னேறி, அறுதியில் ஆறறரிவு படைத்த மனிதனிடம் வந்து, நிறை நிலை மனிதனிடம் நிலைப்பெறுகின்றது. இதைத்தான் ஆன்ம அனுபூதி என்கின்றோம்.

இதை எப்பொழுது நாம் ஒவ்வொருவரும் நம்முள் உணருகின்றோமோ? அப்பொழுதே நாம் நம்மை முழுமையாக அறிந்தவர்களாகின்றோம்.

இதை விடுத்து, **சிவன், சக்தி, விநாயகர், முருகன்** எனும்போது, அதனை பரமனின் (ஆறிவின்) ஆற்றல்களாக புரிந்துக் கொள்ளாமல், ஆட்களாகப் புரிந்து கொள்ளும் அபக்குவ நிலையே, தன்னை அறிவதற்குத் தடையாக அமைகின்றது.

வெட்டவெளியின் ஓரிடத்தில் திடீரென நிகழும் அசைவு அல்லது விரிவே பிரபஞ்சத் தோற்றத்துக்கான அடிப்படை

நிகழ்வு எனும் பொழுது, அவ்வாறு நிழந்த அந்த அசைவு படைக்கப்பட்ட அனைத்திலும் இருக்கின்றது.

அந்த அசைவை '**ஆற்றல்**' என்று விஞ்ஞானம் கூறுகின்றது. அந்த அசைவை '**மனம்**' என்று மெய்ஞ்ஞானம் கூறுகின்றது. இதுதான் வித்தியாசம்.

அதனால்தான், அந்த பரமனின் ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஆனால், அந்த ஆற்றலை ஒரு ஆற்றலிருந்து வேறு ஒரு ஆற்றலாக மாற்ற முடியும்.

உதாரணம்: **– மண் – பானை.**

அந்த அறிவின் '**இருப்பை**' படைக்கப்பட்ட ஒவ்வொருப் பொருளிலும் உற்றுக் கவனித்தால், அதை நாம் நன்கு உணரலாம். அதைத்தான் **அறிவு – அறிபவன் – அறியப்படுவது** என்று எல்லாமாக அந்த அறிவே இருப்பதை, 'திரிபுடி' என்றும் கூறுகின்றோம்.

விஞ்ஞானத்தை '**அறிவு**' எனக் கொண்டால், மெய் ஞானத்தை '**அனுபவம்**' எனக்கொள்ளலாம்.

விஞ்ஞானம் தான் கண்டறிந்த அறிவை தனிப்பட்டதாக மாற்ற முயல்கிறது. அனால், மெய்ஞ்ஞானமோ அந்த தூய அறிவை, அனுபவமாகச் செய்கின்றது.

புறப்பொருட்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு வேண்டு மானால், புறத்தில் வளர விஞ்ஞானம் அவசியமானதாக இருக்கலாம். ஆனால், அருளைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு, அகத்தில் வளர **மெய்ஞானமே** அவசியம்.

ஒருவனை அவனிலிருந்து விடுவித்து, வெட்டவெளியில் சிறுதுகளாக உணரச் செய்வதின் வாயிலாக, அவன் தன்னையும், இந்த உலகத்தையும், இவைகளைப் படைத்த இறைவனையும் உணர்கின்றான். அதுவே, உண்மையான **"மெய்ஞானம்"** ஆகும்.

மற்றவைகள் எல்லாம் எப்படிப்பட்ட புனிதமான விசயங்களைப் புரியவைத்தாலும், அவைகள், அவனைப் பந்தப்படுத்துகின்ற **"பொய்ஞானம்"** ஆகும்.

"வெட்டவெளி தன்னை மெய்யென்று இருப்போர்க்கு பட்டயம் ஏதுக்கடி, குதம்பாய் பட்டயம் ஏதுக்கடி"

**– குதம்பைச் சித்தர்.**

"மெய்ஞானப் பாதையிலேறு – சுத்த
வேதாந்த வெட்டவெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு – உன்னை
அண்டினோர்க்கு ஆனந்தமாம் வழி கூறு".

**– கடுவெளி சித்தர்.**

## வெட்டவெளி

"வெட்டவெளி தனையன்றி வேறு தெய்வமில்லையே"

– சிவவாக்கியர்.

"வெட்டவெளி தன்னில் விளைந்த வெறும்பாழ் / திட்டமுடன் கண்டு தெளிவதினி எக்காலம்?"

– பத்ரகிரியார்.

"வீட்டில் ஒருவரில்லை வெட்டவெளி யானேண்டி"

– பட்டினத்தார்.

"வெட்டவெளி யாயறிவாய் வேறுபல சக்திகளைக் / கொட்டுமுகி லாயணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்"

– பாரதியார்.

போன்ற பாடல்களின் வாயில்களாக வெட்டவெளி அனுபவங்களைக் குறித்த அற்புதங்கள் அறிந்தவாறு அன்றைய ஞானிகள் இருந்ததை அறிய முடிகின்றது.

பொதுவாக, இன்றைய சமூகம் கோவில்கள் என்பதை, நம்முடைய உலகியல் தேவைக்கான பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொள்ளும் ஒரு வங்கி போன்றும், அதில் உள்ள கடவுள்களை கேட்டதையெல்லாம் கொடுக்கும் மளிகைக் கடைக்காரம் போன்றும் பார்க்கின்றது.

அதனால், ஆலயம் என்பது, ஆன்மாவை அறியத்தான் அமைக்கப்பட்டுள்ளது என்பதை அறியாமல், ஆசைகளுடன் கூடிய உலக வாழ்வை மட்டுமே மையமாகக் கொண்டு, மனம்போன போக்கில் போகின்ற போக்கைப் பார்க்க முடிகின்றது.

கோவில்களை உலகம் கடந்த நிலையில், அகநிலைக் கொண்டும் கொஞ்சம் ஆராய வேண்டும்.

பொதுவாகக் கோவிலை கர்ம சித்திக்கானக் கோவில், யோக சித்திக்கானது, ஞான சித்திக்கானது என வகைப்படுத்த வேண்டும் என்றாலும், கோவில்களுக்கான பொது அமைப்பைக் கொண்டு நாம் பார்க்கலாம்.

கோவிலுக்குள் நுழைவதை வான் வெளியில் நுழைவதாகப் பாவித்துக் கொள்வோம். துவக்கத்தில் ஒன்பது கோள்களைக் (நவகிரகங்கள்) கடக்கும் நாம் அவற்றுக்கு அடிப்படையான கதிரவனையும், சந்திரனையும் பார்க்கிறோம்.

பிறகு, அவற்றைக் கடந்திருக்கும் அண்டங்களையும், பேரண்டங்களையும், மண்டபங்களாகவும், பிரகாரங்களாகவும் பார்க்கிறோம்.

இறுதியாக நாம் பார்ப்பது கருவறை.

கருவறை என்பது இருட்டான அறை. அதுதான் கோவிலின் முதன்மையான, முக்கியமான பகுதி.

வெட்டவெளியையேக் கருவறை குறிக்கிறது.

கருவறையில் நிகழும் வழிபாட்டைக் கவனிப்போம்.

தீபம் ஏற்றப்பட்டு உள்ளிருக்கும் சிலைக்குக் காட்டப்படுகிறது. அந்நேரத்தில் பூசை செய்பவர் மணியையும் ஒலிக்கிறார். வெளிச்சத்தில் நாம் அச்சிலையைப் பார்க்கிறோம்.

அதாவது, நம்மால் காணமுடியாத வெட்டவெளியின் பெருந்தோற்றத்தைக் கண்டுகொண்டதானப் பரவசம் அங்கு சாத்தியப்படுகிறது.

வெட்டவெளி, மணி ஒலி, தீப ஒளி எனப் பிரபஞ்சம் தாண்டிய பெருவேளிக்கே சென்று விட்டதாய் ஒரு பேருணர்வு.

வழிபாட்டில் ஐம்பூதங்களும் மதிக்கப்பெறுவது நம் கலாச்சாரத்தின் சிறப்பம்சம். வழிபாட்டின்போது தரப்படும் திருநீறு, மற்றும் திருமண் (மண் பூதம்), தீர்த்தம் (நீர்பூதம்), சாம்பிராணி மணம் (காற்று பூதம்) மலர்கள் மற்றும் திருவமுது போன்றவற்றைக் கவனிப்போம்.

வழிபாட்டில் மந்திரங்கள் முக்கியம் என்பது நம் ஆன்றோர்களின் கருத்து.

இந்த நடைமுறைகளெல்லாம் எதற்காக?.

கோவிலின் கருவறைக்குள் சேமித்து வைத்திருக்கும் ஆகாயத்தை நமக்குள் கொண்டு வருவதற்குத்தான் இத்தனை முறைகளும் வழிபாட்டில் புகுத்தப்பட்டன.


ஆனால், எந்த ஒரு நடைமுறையையும் பின்பற்றாமல் ஆகாயத்தை நமக்குள் கொண்டு வரக்கூடிய ஒரு யுக்தி உண்டு எனில், அது, ஆகாய அம்சத்தின் சிறப்புக்களான ஒலியையும், ஒளியையும் சுட்டிக்காட்டவே, ஓதுவார்கள் பாடல்கள் பாடுவதும், கோவில் கருவறைக்குள் தீபங்கள் ஏற்றுவதும் என ஆகாய பூதத்தின் மகத்துவம் அறிந்தவர்கள் அவ்வாறு உண்டாக்கியுள்ளார்கள்.


ஆம்! கோவிலின் கருவறையில் இருக்கும் ஆகாய சக்தியை நாம் நம்முள் உணர்வதற்கான ஒரு எளிய வழியே ஆலயங்கள் ஆகும்.

ஆகாய பூதத்தில் பிறபூதங்கள் அடக்கம் என்பது நாம் அறிந்ததே. அவ்வகையில் எவ்விதச் சடங்குகளும் செய்தாலும், பாடல்கள் பாடினாலே வழிபாடு நிறைவுறும் என்பதும் நம் சமயத்தில் இருக்கிறது.

இது சாத்தியப்பட்டால், நாத, விந்து கலாதி நமோ நமோ என்ற அருணகிரிநாதரின் வேண்டுதல் போல, நாமும் நம் உண்மை சொரூபத்தை நம்முள் தரிசிக்க முடியும்.

ஓம் தத் ஸத்!


THE HIGH PRIEST
TURBAN
HOLY OF HOLIES
PRIESTS'
CELLS
ARK
7
ARK
6
INCENSE
ALTAR
5
SHOW BREAD
PRIEST'S CELLS
HOLY PLACE
PRIEST'S CELLS
4
MENORAH
PORCH
LAVERS
LAVERS
3
BRAZEN SEA
Jachin
Boaz
2 FOOTSTOOL
ALTAR OF SACRIFICE
1 ENTRANCE GATE
BRAIN
LUNGS
HEART
AORTA
KIDNEYS
GUT
GATE


Vimana
Dwajastambham
Gopuram
Bali Peetham
Maha Mandapam
Adhikara Nandi
Prakaram
Sahasrara
Visuddha
Anahata
Manipura
Swadhisthana
Muladhara
Ajna
Gopuram is the Feet of the God

# வெட்டவெளி



ப்ரக்ஞன்